# அரசியலமைப்புச் சட்டத்திற்கு அரசாங்கத்தின் மறுசீரமைக்கப்பட்ட 22 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

**ஆகஸ்ட் 18, 2022**: அரசியலமைப்புச் சட்டத்திற்கான 22 ஆவது திருத்தச் சட்டமூலம் வெளியிடப்பட்டமை குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) கவனத்தில் கொள்கிறது [ஜுலை 29, 2022 திகதி வர்த்தமானியின் பகுதி II, குறைநிரப்பி ஆகஸ்ட் 02, 2022 திகதியன்று வெளியிடப்பட்டது]. சட்டமூலம் ஆகஸ்ட், 10, 2022 திகதி, பாராளுமன்றத்தின் கட்டளைப் பத்திரத்திலும் கூடக் குறிப்பிடப்பட்டது. 22ஆவது திருத்தமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இச்சட்டமூலம், நிறைவேற்றப்படின் அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தமாக வரும்.

இலங்கை பொதுஜன பெரமுன கட்சி (SLPP) - ஐக்கிய தேசியக் கட்சி (UNP) அரசாங்கத்தால் மீளவும் இரண்டாவது தடவை சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் இதுவாகும். இதற்கு முன்னைய வடிவம் பாராளுமன்றத்திற்கு ஒரு போதும் சமர்ப்பிக்கப்படவில்லை, மற்றும் அது, மா.கொ.நி உட்பட, பலராலும் விமர்சனம் செய்யப்பட்டது.

சட்டமூலம், அதன் முன்னைய வடிவத்திலிருந்த சில பிரச்சினைகளை கவனத்தில் கொள்கின்ற அதே வேளை, அது இலங்கை மக்களின் கோரிக்கைகளுக்கு முரணாக, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவோ அல்லது எந்தவொரு அர்த்தமுள்ள வகையிலான தடைகளும் சமனிலைகளையும் அறிமுகப்படுத்தவில்லை என்பதை மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. சட்டமூலத்தின் உள்ளடக்கங்களை மா.கொ.நி கவனமாகக் கருத்தில் கொள்வதுடன், அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது திருத்தங்களின் மிகவும் பலவீனமான அம்சங்களிலிருந்து சட்டமூலம் வரையப்பட்டிருப்பதையும் கவனத்தில் கொள்கிறது. சட்டமாக நிறைவேற்றப்படின், அது மிகவும் பொறுப்புக்கூறுகின்ற மற்றும் ஒளிவுமறைவற்ற ஒரு அரசாங்கத்திற்கான, பிரஜைகளின் கரிசனைகளைக் கவனத்தில் கொள்ளாத மற்றும் நீண்ட கால நோக்கில் ஜனநாயக நிறுவனங்களையும் மற்றும் இந்த நிறுவனங்கள் மீதான பிரஜைகளின் நம்பிக்கைகளையும் நாசம் செய்யும் ஓர் அரசாங்க முறைமையை அது உருவாக்குவதாக அமையும்.

சட்டமூலத்துடன் பல்வேறு தீவிரமான பிரச்சினைகள் உள்ளன. சட்டமூலத்தின் முன்னைய வடிவத்துடனானது போன்றே, இந்த வடிவத்திலும் கூட, உத்தேசிக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவையின் (பேரவை) அமைப்புருவாக்கம் பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ் எப்படி இருந்ததோ, அதிலிருந்ததை விட கணிசமான வகையில் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

உத்தேசிக்கப்பட்ட பேரவையின் அமைப்புருவாக்கம் அரசாங்கத்திற்கு சாதகமாகவும் மற்றும் அதன் 10 உறுப்பினர்களில் 7 பேர்களை அரசாங்கம் கட்டுப்படுத்துவதற்கு அல்லது செல்வாக்கு

கொண்டிருப்பதற்கு அரசாங்கத்தை இயலச் செய்கிறது. அதனால், மா.கொ.நி இன் பார்வையில் பேரவை என்பது 20ஆவது திருத்தத்தின் கீழ் இருக்கும் பாராளுமன்றப் பேரவையின் ஒரு விரிவாக்க வடிவம் மட்டுமே என்பதாகும். 17ஆவது திருத்தத்தின் கீழ் அரசியலமைப்புப் பேரவையின் உருவாக்கத்தின் பின்னாலிருந்த உண்மையான நோக்கம், ஆட்சிமுறையை அரசியல் மயப்படுத்தலில் இருந்து விடுவிப்பதாகும். இது இரண்டு முறைகளுடன் சம்பந்தப்படுகிறது: முதலாவது, அரசியல்வாதிகளல்லாதவர்களின் ஒரு பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தை பேரவையில் உறுதிப்படுத்துவதும், மற்றையது அரசியல் உறுப்பினர்கள் மீதான அரசாங்க மேலாதிக்கத்தை நீக்குவதாகும். சட்டமூலத்தில் உத்தேசிக்கப்பட்ட பேரவையின் அமைப்புருவாக்கம் இந்தக் குறிக்கோள்களில் எதையும் எட்டவில்லை என்பதுடன் பதிலுக்கு பேரவையின் ஊடாக நியமனங்கள் மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் சுயாதீனத்தை குறைமதிப்பிடுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலிருந்து அமைச்சர்களை (அமைச்சரவை மற்றும் அமைச்சரவைய்லாத) நியமிப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அமைச்சுக்களைத் தீர்மானிப்பதற்கு மற்றும் அந்த அமைச்சுகளுக்கான விடயதானங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒதுக்குவதற்குமான ஜனாதிபதியின் அதிகாரத்தில் மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அமைச்சுகளுக்கான அனைத்து செயலாளர்களையும் அவரது சொந்தத் தற்றுணிபின் கீழ் ஜனாதிபதி நியமிப்பதற்கு இயலுமாக இருக்கும். இது, ஜனாதிபதியின் பதவியில் குவிக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தை திரும்பவும் பாதுகாக்கிறது. ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை வைத்திருக்கலாம் எனவும் மற்றும் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் ஏதேனும் வேறு துறையை மற்றும் செயற்பாடுகளை அவர் தனக்கு ஒதுக்கிக் கொள்வதற்கு முடியுமென்றும் கூட, சட்டமூலம் ஏற்பாடளிக்கிறது. அதனால், மொத்தத்தில் சட்டமூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரக் குவிப்பைக் கவனத்தில் கொள்வதற்கு மிகக் குறைந்தளவே பங்களித்துள்ளது.

நியமிக்கப்படக்கூடிய அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 இற்கும் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தல்லாத மற்றும் பிரதி அமைச்சர்கள் தொகையை 40 இற்கும் சட்டமூலம் மட்டுப்படுத்துகிறது. இந்த எண்ணிக்கை ஏற்கனவே அதிகமாக இருக்கையில், சட்டமூலம் 'தேசிய அரசாங்கள்' தொடர்பில் பத்தொன்பதாவது திருத்தத்தின் அபத்தமான ஏற்பாடுகளைத் தக்க வைத்திருக்கிறது. அவை அரசாங்கம் இந்தக் மட்டுப்படுத்தல்களைக் கடந்து எந்தளவு எண்ணிக்கையான அமைச்சரவை அந்தஸ்து மற்றும் அமைச்சரவையல்லாத அந்தஸ்து கொண்ட அமைச்சர்களை நியமிப்பதற்கு அரசாங்கத்தை அனுமதிக்கிறது.

பொதுவாக இலங்கை முழுவதிலும் பெருமளவிலான போராட்டங்களில் உச்சப்படுத்திக் காட்டப்பட்ட ஆட்சி முறைமை தொடர்பிலான மக்கள் ஏமாற்றத்தின் அடிப்படை புரிந்து கொள்ளப்பட தவறியிருப்பதையே சட்டமூலம் இங்கு குறிக்கிறது. இலங்கை பொதுஜன பெரமுன மற்றும் பொதுஜன பெரமுன-ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்களினால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த முன்மொழிவுகளில் இது ஒரு தொடர்ச்சியான வடிவமாதிரியாக இருந்தது. இந்தப் பிரேரனைகள், இலங்கையைப் பீடித்திருக்கும் ஆட்சிமுறையிலுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதில் நேர்மையாகக் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக ஒரு சில அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் அரசியல் இலட்சியங்களைத் திருப்தி செய்வதற்கு இலக்குக் கொண்டவையாக காணப்பட்டன.

மா.கொ.நி, பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னம் குறிப்பிட்டவாறு, அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்துச் செய்து மற்றும் ஒரு முழுமையான பாராளுமன்ற அரசியலமைப்பு ஜனநாயகத்திற்குத் திரும்புவது மட்டுமே இந்த முன்னொருபோதுமில்லாத அனர்த்த்திற்கான ஒரேயொரு பொருத்தமான பதிலிறுப்பாக அமையும். நிறைவேற்று ஜனாதிபதியின் இந்தக் கட்டுக்கடங்காத மற்றும் ஆராயப்படாத அதிகாரங்கள் நீக்கப்பட்டும் மற்றும் பாராளுமன்றத்திற்கு பதிலளிக்கும் ஒரு அமைச்சரவை நிறைவேற்று பிரதிநிதித்துவத்துடன் மாற்றீடு செய்யப்பட்டாலன்றியும் மற்றும் அவ்வாறு செய்யப்படும் வரைக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அவசியமான தீர்மானங்களை மேற்கொள்வது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

இந்தக் காரணங்களுக்காக, அரசியலமைப்பு ரீதியான கோட்பாடு மற்றும் அரசியலமைப்பு வடிவம் ஆகிய இரண்டினதும் கண்ணோட்டத்தில் பார்க்கையில், இலங்கையின் பொருளாதார மீட்சியின் பகுதியாக இருக்க வேண்டிய நிறுவனரீதியான சீர்திருத்தத்திற்கு அவசியமான அர்த்தபூர்வமான பங்களிப்பை சட்டமூலம் எந்த விதத்திலும் கொண்டிருக்கவில்லை. இலங்கை மற்றும் இலங்கையர்களுக்கான முக்கியமான நேர்மறையான தாக்கமெதுவுமின்றி சிலரை மகிழ்ச்சிப்படுத்துவதற்கு அடையாளச் சீர்திருத்தங்களை அரசாங்கம் முன்னெடுக்கிறது என்பதைக் காண்பிப்பதற்கான காட்சியறைக் காட்சிப்படுத்தலின் ஒரு சிறந்த அப்பியாசமாகவே இது உள்ளது, இந்த விதிவிலக்கான நெருக்கடிகளைக் கவனத்தில் கொள்வதற்கும் மற்றும் எதிர்காலத்தில் இந்நெருக்கடிகள் தோன்றாது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இத்தருணத்தில், முழுமையான சீர்திருத்தங்களுக்கான தேவையை கருத்தில் கொண்டு, இந்தச் சட்டமூலம் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.